(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 308.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2013 ஒற்றோபர் 25, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2600/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகளின் பொழிப்பில் 68வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள,

(i) 1994 இன் 26ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் அறிமுகஞ் செய்யப்பட்ட திருத்தம் மூலமாக பொது மனுக்கள் முறையை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி போதாதெனவும்;

(ii) பிரஜைகளின் மனக்குறைகள் தொடர்பாக செயலாற்றுகின்ற நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அதாவது ஒம்புட்ஸ்மென் பதவியுடன் தொடர்புடைய சட்டங்கள் போதுமானதாகவில்லை எனவும்;

குறிப்பிட்டுள்ள கூற்றுக்களுடன் அரசாங்கம் இணங்குகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பிரஜைகளின் மனக்குறைகளைத் தீர்த்துவைக்க சுயாதீனமான நிறுவனம் ஒன்றைத் தாபிக்க மேற்படி ஆணைக்குழு செய்துள்ள விதப்புரையை அமுலாக்குவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3017/ '12

2.

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவுக்கு வரும்வரை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய பயங்கரவாதச் செயற்பாடுகளின் காரணமாக மரணித்த,

(i) முப்படை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான படை வீரர்கள்;

(ii) பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான அங்கத்தவர்கள்;

(iii) விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான அங்கத்தவர்கள்;

(iv) சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலான அங்கத்தவர்கள்

எண்ணிக்கை யாதென்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது இராணுவ ஆஸ்பத்திரிகளில் அல்லது அதற்கு நிகரான இடங்களில் சிகிச்சை பெறுகின்ற மேற்படி குழுவினரின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கவீனமுற்றுள்ள மேற்படி பாதுகாப்புச் சேவை அங்கத்தவர்களுக்கு இதுவரை செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகைகளின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1971 மற்றும் 1988 – 1989 காலப்பகுதிகளில் இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சிகளின் காரணமாக மேற்படி பாதுகாப்புப் படைப் பிரிவுகளிலிருந்து மரணித்த படை வீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதிகளில் அங்கவீனமுற்ற பாதுகாப்புப் பிரிவு அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்காக செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3116/ '12

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியன காணி வாரியாக யாவையென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா

என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3695/ '13

5.

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வங்கியின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு இலங்கை வங்கியினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக இலங்கை வங்கியினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2602/ '12

6.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 65 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமும் ஒழுங்கும் தொடர்பான பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படாமல் உள்ளது என்பதாகவும்; ஆயுதம் தாங்கிய குழுக்கள் வடக்கிலும் கிழக்கிலும் பல்வேறு குற்றச்செயல்களைப் புரிகின்றனர் என்பதாகவும்; பொலீசார் அரசியல் மயப்படுத்தலுக்கு உள்ளாகின்றனர் என்பதாகவும் உள்ள கூற்றுகள் தொடர்பாக அரசாங்கத்தின் பதில் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையில் சுடு படைக்கலங்களின் உபயோகத்தைத் தொடர்ந்து அரசியல் வன்முறை அதிகரித்துள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது எந்தத் திகதி தொடக்கம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3077/ '12

7\.

கௌரவ புத்திக பதிரண,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற வனப் பூங்காக்களிலும் சரணாலயங்களிலும் மண் மற்றும் மணல் அகழ்வு செய்வதற்காக புவிச் சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் சட்டத்திற்கு முரணாக உரிமப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தற்போது மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மடு வீதி சரணாலயத்தின் ஆண்டான் குளத்தை அண்டியதாக பரப்புக்கடந்தான் பிரதேசத்திலும் திருகோணமலை கடற்படை வேலைத்தள சரணாலயத்தின் கல்மெட்டியாவ பிரதேசத்திலும் மண் மற்றும் மணல் அகழ்வுக்காக மேலே கூறப்பட்டவாறு உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வாறு செயற்படுவது சட்டத்திற்கு முரணானது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வனப் பூங்காக்களிலும் சரணாலயங்களிலும் சட்டத்திற்கு முரணாக மணல் மற்றும் மண் அகழ்வு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3117/ '12

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து வவுனியா மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து வவுனியா மாவட்டத்தில் மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியன காணி வாரியாக யாவையென்பதையும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

கௌரவ பி. ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் அரசாங்க வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் உள்ள வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்காக வருடாந்தம் செலுத்தப்படும் மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அமைச்சின் கீழ் உள்ள அரசாங்க வாகனங்கள், வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சொந்த வாகனங்களை வேறுபடுத்தி இனம் காண்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பில் விளக்கமளிப்பாரா என்பதையும்;

(iii) அமைச்சுக்கும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் சொந்தமான அரசாங்க வாகனங்களில் அரச இலச்சினையுடன் குறித்த நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3696/ '13

10.

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீ லங்கா) கம்பனியின் மூலம் 2013.03.06 ஆம் திகதியன்று ரிவிர பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விளம்பரத்துக்கு இக் கம்பனியினால் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகை எந்த செலவுத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதென்பதையும்;

(v) ஏதேனுமொரு அரசியல் கட்சியின், ஏதேனுமொரு பதவிக்கு எவரேனுமொரு நபர் நியமிக்கப்படும் போது அதற்கேற்புடையதாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனியினால் விளம்பரங்களை பிரசுரிக்க முடியுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2603/ '12

11.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 66 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) இற்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடாத்தப்படாமையினூடாக, தவறுகள் புரிபவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதில்லை எனும் உணர்வு ஏற்படலாம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பாகவும்;

(ii) சட்ட விரோத ஆயுதம் தாங்கிய குழுக்கள் தொடர்பாக தனது இடைக்கால சிபாரிசுகள் பூரணமாகச் செயற்படுத்தப்படாமை தொடர்பாக அவ்வாணைக்குழு கவலை தெரிவிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பாகவும்

அரசாங்கத்தின் பதில் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3078/ '12

12.

கௌரவ புத்திக பதிரன,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையில் மருத்துவர்களாகப் பணிபுரியும் ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகள் மேற்கத்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு சமனான நிலைமையில் கவனிக்கப்படுகின்றார்களா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி மருத்துவப் பட்டதாரிகள் இருதரப்பினரும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் ஆரம்பக்கட்டத்தில் அடிப்படைச் சம்பளம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கற்றுப் பயிற்சிக் காலகட்டத்தினுள் மேற்கத்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு அடிப்படைக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதே கால கட்டத்தினுள் இருக்கும் ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளுக்கு செலுத்தப்படுவதில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி நிலைமையானது ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறெனின், அந்த நிலைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3118/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் – ஹபரண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) ஒப்பந்தகாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii)அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2013, நவெம்பர் மாதம் 05 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2013 நவெம்பர் 05 ஆம் திகதி சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 09.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

14.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

15.

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

16.

ஹேண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.